# எம் மண்ணில் மடிந்த
# முதல் இளங்குரு லிஜியே, அமதி

**செ. அன்புராசா, அமதி**
BTh (Rome), MPhil (Jaffna)
இயக்குநர்,
'அமதிக்கரங்கள்' நலனோம்பு மையம்,
மாங்குளம்

## லிஜியே அடிகள் ஓர் உதாரணமே!

அருட்தந்தை பீலிக்ஸ் பிரான்சுவா லிஜியே, அமலமரித் தியாகிகளின் இரண்டாவது அணியில் ஈழநாடு வந்துசேர்ந்த பிரான்சிய நாட்டைச் சேர்ந்த ஓர் இளங்குரு ஆவார். தமது முப்பதாவது வயதில், சுமார் இரண்டு ஆண்டுகளே பணிசெய்த நிலையில், கொலரா வாந்திபேதித் தொற்றுக்கு இலக்காகி, இறைபதம் அடைகிறார். லிஜியே அடிகளாரைப் போன்று சொந்த நாட்டினை விட்டு, மிகவும் தூரதேசமிருந்து வந்து, முற்று முழுதான புதிய சூழலில், வசதி வாய்ப்புகள் மிகவும் குறைந்த ஒரு காலத்தில், ஆள்கொல்லி நோய்ப் பரவல், கடுமையான காலநிலை, தூரப் பயணங்கள் போன்ற இறுக்கமான சூழலில் மிகவும் உயர்வான பணிகளைப் பல அமலமரித்தியாகிகள் ஆற்றி இம்மண்ணிலேயே மடிந்திருக்கிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து (1847), அமலமரித்தியாகிகள் எத்தகைய தியாகங்களை மறையறிவிப்புக்காக இம்மண்ணில் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக அருட்தந்தை லிஜியே அவர்களின் வாழ்க்கை வரலாறு உதாரணமாக இக்கட்டுரையில் முன்வைக்கப்படுகிறது.

## சிறுவன் லிஜியே!

அருள்தந்தை பீலிக்ஸ் பிரான்சுவா லிஜியே 1821ம் ஆண்டு மே மாதம் 17ம் திகதி பிரான்சில் வீட்ஸ் என்ற ஊரில் அவிஞ்ஞோ என்ற மறைமாவட்டத்தில் மிகவும் கடவுள் நம்பிக்கை நிறைந்த குடும்பத்தில் பிறந்தார். லிஜியேயின் தந்தை, புனித வாழ்வு வாழ்ந்ததோடு தம் குடும்பத்தில் ஒரு பிள்ளையைக் குருவாக அர்ப்பணிக்க விரும்பினார். ஆதலால், தம் மகன் லிஜியேயைச் சிறிய குருமடம் அனுப்பத் தீர்மானித்தார். ஆனால், லிஜியே மிகச் சிறியவனாக இருந்த காரணத்தினால் பிரத்தியேகமாக

ஆசிரியர் ஒருவரை வீட்டிற்கு அழைத்து, சிறிய குருமடத்தில் அனுமதிக்கப்படும் வரை லிஜியேவுக்குத் தன் வீட்டிலேயே வைத்துக் கற்பித்தார்.

பின்பு, அவன் சிறிய குருமடம் சென்றபோது அவனுடைய வகுப்பு மாணவர்கள், ஏற்கனவே கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தார்கள். லிஜியே கடைநிலை மாணவர்களில் ஒருவரான இருந்தான். இவன் சோம்பேறியாக இருக்கிறான் என இவனது ஆசிரியர்கள் கருதியதால், அதற்கேற்ப அவன் வகுப்பில் நன்கு கவனிக்கப்பட்டான். இளைஞனான லிஜியே நிறையத் துன்பங்களை அனுபவித்ததோடு, யாரையும் குற்றம் கூறாமல் அனைத்தையும் பொறுமையாக ஏற்றுக்கொண்டான். எனினும் ஒருசில மாதங்களில் தன் வகுப்பு தோழர்களின் தரத்திற்கு அவனால் முன்னேற முடிந்தது.

குருமடம் சென்ற இரண்டாம் ஆண்டில், லிஜியேயின் நேர்த்தியான செயற்பாடுகளை முன்னிட்டு புனித கன்னிமரியின் கழகத்தில் அனுமதிக்கப்பட்டு அவனுடைய நற்பண்புகளையும் ஏனைய திறமைகளையும் முன்னிட்டு இக்கழகத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்படுகிறான். தனது மேன்நிலை பொறுப்பாளர்களால் கொடுக்கப்பட்ட அனைத்து பொறுப்புகளையும் செவ்வனே செய்து முடிக்கிறான்.

சிறிய குருமடத்தில் எட்டு ஆண்டுகளைக் கழித்த பின்னர் அவிஞ்ஞோன் உயர் குருமடத்திற்கு அனுப்பப்படுகிறான். அக்காலத்தில் இவ்வுயர் குருமடம் சுல்பீசியன் அருள் தந்தையர்களின் வழிநடத்தலில் இருந்தது. இங்கும் லிஜியே நற்பண்புகளுக்கும் ஒழுக்கமான செயற்பாடுகளுக்கும் தன் வகுப்பு நண்பர்களுக்கு முன்மாதிரியாக விளங்கியதோடு இறையியற் கற்கை நெறியையும், மிகவும் உற்சாகமாகக் கற்கிறார். கற்றலுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் போதுமானதாக இல்லாததால், அவரது விளையாட்டு நேரத்தையும் ஓய்வான நேரத்தையும் கல்வியில் மேலும் முன்னேறுவதற்காகப் பயன்படுத்துகிறார். நோயுற்ற மாணவர்களை பராமரிக்கும்

பொறுப்பினை ஏற்றுச் செய்துவந்தார். இதனால், இவர் பிறரன்பை வெளிப்படுத்தும் பல சந்தர்ப்பங்களைப் பெற்று நோயுற்ற குருமட நண்பர்களுக்குத் தனது சேவையினைச் சிறப்பாக வழங்கினார்.

**குருமடத்திலிருந்து விலகுகிறார்!**

தனது குருத்துவப் பயணத்தில் குருத்துவ நிலையை அடைய உதவிபுரிந்த மற்றும் தன்னை வழிநடத்திய அருட்தந்தையர்கள் மட்டில் மிகவும் மரியாதை கொண்டிருந்தான். உயர் குருமடத்தின் உருவாக்கத்தில் இருந்தபோது தன்னுடைய நீண்ட தியானத்தின் பின், உலகப் பொருட்கள் மீதும், ஆட்கள் மீதும் கொண்ட பற்றுத் தனது குருத்துவப் பயணத்துக்கு இடையூறாக இருக்குமென எண்ணி குருமடத்திலிருந்து விலகத் தீர்மானிக்கின்றார்.

**அமலமரித்தியாகிகளுடன் இணைகிறார்!**

இச்சந்தர்ப்பத்தில் அமலமரித்தியாகியான அருட்தந்தை லியானேட், அவிஞ்ஞோன் குருமடத்திற்கு வருகிறார். லிஜியேக்கு அவருடன் உரையாடும் வாய்ப்புக் கிடைக்கிறது. தொடர்ந்து உயர் குருமடத்தில் இரண்டு வருட இறையியற் கற்கையை நிறைவு செய்த பின், லிஜியே இக்குருமடத்தை விட்டுவிலகி, அமலமரித்தியாகிகள் சபையில் இணைந்து கொள்கிறார். அங்கு 1847ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ம் திகதி நவசந்நியாசபயிற்சிகளைமேற்கொள்ளஅனுமதிக்கப்படுகிறார். சிறிய, உயர் குருமடங்களில் இருந்தது போலவே நவசந்நியாச பயிற்சியிலும் முன்மாதிரியான ஆர்வமுள்ள மாணவனாகத் திகழ்ந்தார்.

ஏற்கனவே, குருமடங்களில் பெற்றுக் கொண்ட புண்ணியங்களில் வளர்ந்ததோடு, நற்செய்திப் புண்ணியங் களான தாழ்மை, கீழ்ப்படிவு, பிறரன்பு மற்றும் தேவையற்ற தகராறுகளை தவிர்த்தல் போன்ற பண்புகளுடன் இறைவன் மேற்கொண்ட தீராத அன்புடன் வாழ்ந்தார். இந்நவசந்நியாசத்திலும் நோயுற்ற மாணவர்களைப் பராமரிக்கும்

பணியை மேற்கொண்டார். 1948ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ம் திகதி ஓர் அமலமரித்தியாகியாக நிரந்தர அர்ப்பணத்தை மேற்கொண்டு அமலமரித்தியாகியாகினார்.

இதன் பின்னர், இறையியற் கற்கையை நிறைவு செய்வதற்காக, மார்சை குருமடத்திற்கு அனுப்பப்படுகிறார். அங்கு, இவ்விளந்துறவி லிஜியேயில் விளங்கிய புண்ணியங்களாலும் திறமைகளாலும் ஏனைய நற்பண்புகளாலும் மார்சைகுருமடமேலாலர்களின்நல்லெண்ணத்தைப்பெறுகிறார். இந்நிலையில் அமலமரித்தியாகிகள் சபையின் தலைவர் குருப்பட்டத்தின் பின், லிஜியேயை அமலமரித்தியாகிகளின் மறைப்பணித்தளமாகிய இலங்கைக்கு மறைப்பணியாளராக அனுப்பத் தீர்மானிக்கிறார்.

**இறைவனின் குருவாகத் திருப்பொழிவு!**

1849ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ம் திகதி அருட்சகோதரர் லிஜியே இறைவனின் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டு, அவருக்கு முதலாவது மறைப்பணித்தளமாக இலங்கை கிடைக்கிறது. அருட்தந்தை லிஜியே மார்சையிலிருந்து இலங்கைக்கு அருட்தந்தையர்களான மூர்க்கல், லே, பெஸ்கு ஆகியோருடன் 1849ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் திகதி புறப்பட்டு, முப்பத்தேழு நாள்கள் கடற் பிரயாணத்தின் பின், யாழ்ப்பாணத்தை வந்தடைகின்றனர். இவர்களே இலங்கைக்கு வருகைதந்த இரண்டாவது அமலமரித்தியாகிகள் குழுவினர் ஆவர்.

**புலோலிப் பணித்தளத்தில்!**

அருட்தந்தை லிஜியே, யாழ். மறைமாநிலத்தில் பருத்தித்துறையின் பரந்த பணித்தளத்தில் பங்குத்தந்தையாகத் தம் பணியைத் தொடங்குகிறார். அவருடைய நிரந்தர வதிவிடமாகப் புலோலி தேவாலயம் விளங்கியது. ஏனெனில், இதுவே பணித்தள மையமாகவும் அருட்தந்தையர்களுக்கு ஏற்ற, சில அடிப்படை வசதிகளைக் கொண்ட இடமாகவும் இருந்தது. தொடக்கத்தில், அருட்தந்தையர்களான கீட்டின்,

சியாமின் ஆகியோர் அவரின் தோழர்களாக காலத்துக்கு காலம் அவருடன் தங்கி இருக்கிறார்கள். அருட்தந்தை லிஜியே இறைவன்மீது கொண்ட நம்பிக்கையின் ஆழம் அவர், ஆன்மாக்களின் மீதுகொண்ட ஆர்வத்தினை எமக்கு வெளிக்காட்டி நிற்கின்றது.

1850ம் ஆண்டு செப்டம்பர் மாதம் அருட்தந்தை லியோ மோறுவா, அருட்தந்தை லிஜியேவின் நிரந்தரப் பணித்தோழராக அனுப்பப்படுகிறார். அருட்தந்தை மோறுவா மார்சை குருமடத்தில் லிஜியேயின் தோழனாக இருந்ததோடு, கிளாலி, மிருசுவில் ஆகிய ஆலயப் பணித்தளங்களைக் கண்காணித்து வந்தார். அதேவேளை அருட்தந்தை லிஜியே பருத்தித்துறை, பச்சிலைப்பள்ளி, முல்லைத்தீவு ஆகிய பணித்தளங்களைக் கவனித்துக் கொள்கிறார். புலோலியிலிருந்து ஏனைய பணித்தளங்களுக்குச் செல்லுகிறபோது 10 – 21 நாள்கள்வரை பணித்தளங்களிலிலேயே தங்கியிருந்து பணி செய்துவிட்டு பிரதான பணித்தள மையமாகிய புலோலிக்குத் திரும்புவார்கள்.

நீண்ட நாள்கள் பணித்தளங்களில் தங்கி நிற்பது கடினமாக இருப்பினும், அப்பணித்தள இறைமக்களின் பல்வேறுபட்ட தேவைகளை நிறைவு செய்வதற்காக, இவ்வாறு தங்கி நிற்க வேண்டிய நிலை ஏற்படும். மக்களுக்கு நன்மை பயக்கும் பணிகளை செய்வதற்கும், இறைவனின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும், மக்கள் பேசுகின்ற மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டிய தேவையை உணர்கிறார்கள்.

**பணியில் தீவிரம்!**

அதனால், அருட்தந்தை லிஜியே புலோலி பணித்தளத்தில் இருக்கும்போது அங்கு அதிகமான பணிகள் இல்லாததால் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்வதில் நீண்ட நேரத்தை செலவளித்தார். உணவு உட்கொள்ளும் வேளைகளில் கூடத் தமிழ் நூல்களை வாசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தமிழ் மொழியை இலகுவாகப் புரிந்துக்கொண்டாலும் சொற்றொடர்களும், அவற்றின் பாவனையும் அவருக்குச்

சிக்கல்களைக் கொடுத்தன. எவ்வாறாயினும், தமிழில் பேசுவதற்கும் பிரசங்கிப்பதற்கும் அவரால் இயலுமானதாக இருந்தது. பங்கு மக்களுக்கு தமிழில் அறிவுறுத்தல்களைக் கொடுத்து வந்தார். அத்துடன் தன்னுடைய மறையுரைகளுக்குத் தேவையான தமிழ்க் கருத்துக்களை முன்னாயத்தமாக எழுதி வைத்துக் கொள்வார்.

இவர் தன்னுடைய பணியை ஆலயங்களில், பிரசங்கிப்பதிலும், பணிமனையில் அறிவுறுத்தல் கொடுப்பதிலும் மட்டுப்படுத்தாமல் ஒரு நல்லாயனாகத் தம் மந்தைகளை எங்கெங்கு சென்றாரோ அங்கெல்லாம் தேடிச்சென்றார். குடும்பங்களை சந்தித்தார், அவர்களின் சுக துக்கங்களில் பங்கெடுத்தார், அவர்களின் கதைகளுக்குச் செவிமடுத்தார், அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தார், உடைந்துபோன குடும்பங்களை ஒப்புரவாக்கினார். அவதூறுகளையும் அநீதிகளையும் அகற்றினார், கிறிஸ்தவர்களுக்கு மறையின் உயர் விழுமியங்களையும், கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கு சமயத்தின் நல்ல விடயங்களையும் அவர்களின் பிழைகளையும் சுட்டிக்காட்டினார். கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுடனும் உரையாடுவதிலும் அவர்களை கடவுள் பக்கமாகக் கொண்டு வருவதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.

**கொலரா ஆட்கொல்லி நோய்ப் பரம்பல்!**

காடுகளால் சூழப்பட்ட மிகக் கடினமான பணித்தளமாகிய முல்லைத்தீவில் உயிர்க்கொல்லி நோயான கொலரா நோய் ஏற்பட்டபோது கிறிஸ்தவர் அல்லாத ஒருவருக்கு இறக்கும் தருவாயில் திருமுழுக்குக் கொடுத்ததையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். இன்னுமொரு மறைத்தள இடமாகிய வதிரியில் பாவிகளினதும், அடிமைகள் போன்று வேலை செய்பவர்களினதும் நிலையைக் குறித்து மனம் வருந்தினார். இம்மக்களைப் பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்காக பல மணி நேரங்களை பாவசங்கீர்த்தனத் தொட்டியில் செலவளித்தார். பாவ சங்கீர்த்தனப் பணிக்கு அடுத்த பணியாக,

அருட்தந்தை லிஜியே நோயாளர்களைப் பராமரிக்கும் பணியைச் செய்துவந்தார். 1851ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கொலராவினால் பலர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டபோது நோயாளிகளுக்கு உதவி செய்ய ஒருபோதும் பின்நிற்கவில்லை.

1851ம் ஆண்டிலே கொலராநோய் முல்லைத்தீவில் பரவியபோது இந்நோயினால் பாதிப்புற்றவர்களுக்கு உதவவும், பாவசங்கீர்த்தனம் நோயில்பூசுதல் போன்ற திருவருட்சாதனங்களை வழங்கவும், மழையிலும் வெயிலிலும் காடுகளூடாகப் பல மணிநேரம் பல மைல்தூரம் நடந்து சென்று பணியாற்றினார். தனது சுகத்தையும் கவனியாது, ஓய்வுறக்கம் மறந்து, கடுமையாகப் பணிசெய்தார். துல்லைக்குட்டெண்டல் என்ற பருத்தித்துறையின் ஒரு சிறிய கிராமமானது வன்முறைக்கும் குற்றங்களுக்கும் பெயர்ப்பெற்றது. இறை தண்டனையாகவே கொலரா இக்கிராமத்தில் மிக மோசமாகப் பரவியதாகக் கருதப்பட்டது.

அருட்தந்தை லிஜியே இந்நிலை அறிந்து அக் கிராமத்தின் மீது அக்கறை கொண்டார். அக்கிராமத்தில் பலர் இறந்துபோக ஒருசிலர் தப்பிப் பிழைத்தார்கள். இம்மக்கள் கழுத்தில் கயிற்றுடனும் தலைகளில் முள் முடிகளுடனும் அருட்தந்தையின் திருப்பலி நிகழ்வில் பங்கேற்றார்கள். திருப்பலியின் பின் அருட்தந்தை லிஜியே தாமே, மனமாற்றத்தின் மேற்சொன்ன அடையாளங்களை அணிந்துகொண்டு வெளிப் படையாக பரிகார வாக்குறுதியை அக்கிராமத்தின் சார்பில் உச்சரித்தார். அதன்பின் அந்நோய் அக்கிராமத்தில் யாருக்கும் ஏற்படவில்லை.

**பஞ்ச காலம்!**

மேலும், ஏற்கனவே கொலரா நோயினால் பாதிப் புற்றவர்கள் இந்நோயிலிருந்து குணமடைந்தனர். ஆனால் அடுத்தபடியாக பஞ்சம் இம்மக்களைச் சூழ்ந்து கொண்டது. அந்நிலையில் அருட்தந்தை லிஜியே அம்மக்களை வழமையான கடற்றொழிலை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறார்.

ஆனால், அவர்களுடைய அனைத்து முயற்சிகளும் வீணாகியது. ஏனெனில், அவர்களால் ஒரு மீனைக்கூட பிடிக்க முடியவில்லை. அருள்தந்தை லிஜியே மீண்டும் முயற்சி செய்ய கட்டளையிடுகிறார். அவர்களும் நம்பிக்கையுடனும் கீழ்ப்படிதலுடனும் அவர் கூறியதைக் கேட்டு நடந்தபோது, ஏராளமான மீன்களைப் பிடித்தனர். அருட்தந்தை லிஜியே மறைப்பணியாளராக இருந்தபோதும் பிறரன்புப் பணிகளில் அதிகமாக ஈடுபட்டார்.

**ஆன்மீகப் பணியே மையம்!**

ஆனால், அவருடைய முக்கியபணி ஆன்மீகப் பணியாகவே இருந்தது. சிறந்த மறைப்பணியாளராக இருப்பது எப்படி என்பதை அடிகளார் நன்கு அறிந்திருந்தார். நாளாந்த திருப்பலியை மிகுந்த ஆயத்தத்துடன் நிறை வேற்றுவதும், பக்தியுடனும் அர்ப்பணத்துடனும் திருப்பலியை ஒப்புக்கொடுப்பதும், அவர் இறைவன்மீது கொண்ட நம்பிக்கையையும் ஆர்வத்தையும் எடுத்துக்காட்டி நின்றது. சபை ஒழுங்கு நூலில் குறிப்பிட்டிருப்பதுபோல நற்கருணை சந்திப்பை மிக நேர்த்தியாக செய்து வந்தார். புனித கன்னிமரியாளின் மட்டில் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். தன்னுடைய நாளாந்தப் பணிகளை அவளின் தாய் அன்பிற்கு ஒப்புக்கொடுத்து வாழ்ந்தார்.

தமது அமலமரித்தியாகிகளின் சபையின் மட்டில் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். ஒரு நல்ல துறவியாக, அமலமரித்தியாக சபையின் ஒழுங்கு நூலை அன்றாட வாழ்வின் உன்னதமான வழிகாட்டியாகக் கொண்டார். ஒவ்வொரு நாளும் ஒழுங்கு நூலின் ஒருபகுதியை வாசிப்பதோடு, துறவற வாக்குறுதிகளைப் பிரமாணிக்கமாகக் கடைப்பிடித்தார். கீழ்ப்படிவு வாக்குறுதியை மிகவும் அன்புசெய்ததோடு, ஐரோப்பாவில் வாழப்படும் குழும வாழ்க்கைமுறையை நேசித்து, அவ்வாறே இங்கும் சிறப்பாக வாழ்ந்து வந்தார்.

**ஆட்கொல்லி தொற்றாளர்களுக்குப் பணி!**

*1851ம் ஆண்டில் தொடக்க காலப்பகுதியில் அருட்தந்தை லிஜியே முல்லைத்தீவுக்கு மீண்டும் சென்று வறுமையினாலும் கொலரா ஆட்கொல்லி நோயினாலும் பீடிக்கப்பட்ட பிரதேசங்களில் பல நாள்கள் தனியாகத் தங்கியிருந்தார். புலோலி மறைத்தள மையத்திற்கு இரண்டு மாதங்களின் பின்னரே திரும்பினார். மறைத்தள மையத்திலிருந்து தொலைவில் நீண்டகாலமாக பணியாற்றுவது உடல் நலத்திற்கு கடினமாக இருந்தாலும் அவரது ஆன்மாவிற்கு நிறைவாக இருந்தது. புலோலியில் நீண்ட காலம் தங்கியிருக்காது மே மாதத்தில் பச்சிலைப்பள்ளி என்ற இன்னுமொரு கொலரா தொற்றினால் பாதிக்கப்பட்ட மறைத்தளத்திற்குச் சென்றார். அங்கு ஆவணி மாத இறுதிவரை தங்கியிருக்கவேண்டி எற்பட்டது. அவர் வதிரியை விட்டு வெளியேறும் போது அவரது உடலில் ஏற்கனவே கொலரா கிருமிகள் தொற்றியிருந்ததை அவர் அறிந்திருக்கவில்லை.*

*பச்சிலைப்பள்ளியில் மிகக் கடுமையாக நோயாளி களுடன் பணியாற்றினார். பிந்திய இரவுநேரம் வரை ஆலயத்தில் போதிப்பதையும், பாவசங்கீரத்தனம் கேட்பதையும் செய்து வந்தார். அங்கிருந்தபோது கொலரா நோயினால் பாதிக்கப்பட்ட, சற்றுத் தொலைவில் அமைந்திருந்த இன்னுமொரு பிரதேசத்திற்கும் அழைக்கப்பட்டார்.*

*மிகக் களைப்படைந்து இருந்த நிலையில், மிகக் கடுமையான வெயிலின் சுடுமணலில் அக்கிராமத்திற்கு நடந்து செல்கிறார். அவருக்கு உதவியாகவோ அல்லது அவரை அழைத்துச் செல்லவோ யாரும் வரவில்லை. ஏனெனில் ஒவ்வொருவரும் கொலரா நோயின் பயப்பீதியில் இருந்தார்கள். ‘‘நல்லது’’ எனக் கூறிய லிஜியே அடிகளார், ‘‘என்னை அழைத்துச் செல்ல வேண்டிய கடமையை அவர்கள் செய்யவில்லை. நான் எப்படியாவது அங்கு செல்வேன். என்னுடைய உடல்நிலை மோசமான நிலையை அடைவது எனக்குத் தெரிகிறது. ஆனால், நிலையான அழிவிலிருந்து மிகப்பெறுமதியான வாழ்வை*

மீட்டெடுப்பது ஓர் ஆத்மார்ந்த செயலல்லவா!” எனக் கூறியவாறு தன்னுடைய முழுப் பலத்தையும் சுதாகரித்துக்கொண்டு தன் பயணத்தைத் தொடர்கிறார்.

**உடல்நிலை மோசமடைந்தாலும் ஆன்மிகப் பணிகள் தொடர்ந்தன!**

ஆனால், வெப்பமும், களைப்பும் அவரை மிக மோசமாகப் பாதித்தது. அவர் வரவேண்டிய கிராமத்தை வந்தடைந்தாலும், அவர் உடல் வெப்பநிலை மிக மோசமான நிலையில் இருந்தது. இந்நிலையிலும் அவர் நோயாளிகளை தரிசிப்பது, ஆலோசனை வழங்குவது, போதிப்பது, பாவசங்கீர்த்தனம் கேட்பது போன்ற பணிகளை மேற்கொள்ளத் தயங்கவில்லை. அருட்தந்தை மோறுவா, அருட்தந்தை லிஜியே இவ்வாறு நோய்வாய்ப்பட்டிருப்பதைக் கேள்வியுற்று, அவரை அழைத்து வர, ஒரு பணியாளருடன் குதிரையை அனுப்பி வைக்கிறார்.

ஆனால், அருட்தந்தை லிஜியே பணியாளருடன் வதிரி திரும்புகையில் கொலரா பாதிப்புற்ற இன்னுமொரு கிராமத்தைப் பற்றிக் கேள்விபடுகிறார். அங்கும் தம்பணி தேவைப்படுவதை உணர்கிறார். தன்னுடைய உடல் பலவீனத்தையும் மறந்து, பாதிக்கப்பட்ட அம்மக்களுக்குச் சேவையாற்ற அக்கிராமத்திற்குச் செல்கிறார். ஆனால் தெய்வாதீனமாக அக்கிராமத்திற்குச் செல்கிற பாதையை தவறவிடுகிறார். அன்றைய முழு நாளும் குதிரையில் பயணித்து இருள்சூழும் வேளையில் வதிரியை அடைகிறார். அருட்தந்தை மோறுவா அவரை வரவேற்று, ஓய்வெடுக்கும்படி கூறி, சில நாள்களில் அவர் தேறிவிடுவார் என்றும் நம்பிக்கை ஊட்டுகிறார்.

ஆனால், அருட்தந்தை லிஜியே, தன்னுடைய உடல் நலத்தைப் பார்க்கிலும் அக்கிராமத்தின் கொலரா நோயாளிகள் பற்றிய கரிசனையோடு இருக்கிறார். மறுநாள் காலை திருப்பலி முடிந்ததும் அக்கிராமத்திற்கு செல்ல விரும்புகிறார். அருட்தந்தை மோறுவா அவருக்கு மென்மையான உணவைக் கொடுக்கிறார். ஆனால், அருட்தந்தை லிஜியேயின் உடல்நிலை

எவ்வுணவையும் ஏற்க முடியாத நிலையில் இருந்தது. மாலை முழங்காலிலிருந்து சொல்லப்பட்ட நீண்ட செபத்தின் பின்னர் அருட்தந்தை லிஜியே பாயில் சில மணித்தியாலங்கள் படுத்து ஓய்வெடுக்கிறார்.

**இறப்பின் பிடியில் இறுதிக் கணங்கள்!**

அன்று நள்ளிரவில் வாந்தி எடுக்கத் தொடங்குகிறார். ஆம், அவருக்கு கொலரா நோய் ஏற்பட்டிருக்கிறது. அருட்தந்தை மோறுவா உடனடியாகவே பாவசங்கீர்த்தனம், நோயில்பூசுதல் திருவருட்சாதனங்களை வழங்குகிறார். மறுநாள் காலை அருட்தந்தை லிஜியே தனது அமலமரித்தியாகிகளின் சிலுவையை முத்தமிட்டபடி ஆன்மாக்களின் மேல்கொண்ட அன்பினால் தம் ஆன்மாவை கடவுளிடத்தில் ஒப்படைக்கிறார். அன்றைய நாள் யூன் மாதம் 16ம் திகதி 1859ம் ஆண்டு. இவரே இலங்கையில் இறைபதமடைந்த முதலாவது இளம் அமலமரித்தியாகி. அந்நேரத்தில் அவருக்கு வயது 30.

**சாந்தமான, எளிமையான, ஆன்ம வாஞ்சை கொண்ட இளந்துறவி!**

அமலமரித்தியாகிகளின் அன்றைய குழுமத்தின் தலைவராகிய அருட்தந்தை சமேரியா அமலமரித்தியாகிகளின் நிறுவுனர் ஆயர் இயூஜின் டி மசனட்டிற்க்கு இச்சோகச் செய்தியைப் பின்வருமாறு எழுதுகிறார். கடந்த இரண்டு ஆண்டுகளாக அருட்தந்தை லிஜியே என்னுடைய நிர்வாகத்தின் கீழ் பணிசெய்ததாகவும், அவர் மிக உன்னதமான ஒரு துறவியாகவும் புனித மறைப்பரப்பாளராகவும் திகழ்ந்திருக்கிறார் என்றும் அவரது ஆன்மீக தாகம் நிறைந்த இறைப்பணியிலே பலவேளைகளில் நிதானமான பணிகளை ஆற்றும்படி கூறியிருப்பதாகவும், இறுதியான இரண்டு மாதங்களில் அவர் செய்த பணிகளை அறிந்திருந்தால் அவருடைய பணியின் வேகத்தை குறைத்திருக்க கூடியதாக இருந்திருக்கும் எனவும் குறிப்பிடுகிறார். “மிகவும் சாந்தமான, எளிமையான, ஆன்மாக்களை மீட்கும் வாஞ்சை கொண்ட ஒரு சகோதர குருவைத் தாம் இழந்திருப்பதாகவும், அதேவேளை இறைவனுடைய இராட்சியத்தில் சந்தேகத்திற்கு இடமின்றி

எமக்காக பரிந்துரைக்கிற ஒருவரை பெற்றிருக்கிறோம்'' எனவும் குறிப்பிடுகிறார்.

அருட்தந்தை சமேரியா அருட்தந்தை லிஜியேயின் பூதவுடலை யாழ்ப்பாணம் கொண்டுவர முயற்சித்தாலும், கொலரா நோயின் தீவிரத்தால்; உடலை யாழ்ப்பாணம் கொண்டுசெல்ல உள்ளூர் அதிகாரிகள் அனுமதி மறுக்கின்றனர். அதனால், அருட்தந்தை லிஜியேயின் பூதவுடல் வதிரி ஆலயத்தினுள் நல்லடக்கம் செய்யப்படுகிறது. அருட்தந்தை சமேரியா ஒரு குறிப்பினை அவருடைய பூதவுடல் தாங்கியிருந்த பேழையினுள் வைக்கிறார். அம்மடலில் அருட்தந்தை மோறுவா, அருட்தந்தை பேஸ்கு ஏ மோலா, பருத்தித்துறை சமாதான நீதவானும் ஒரு நல்ல கத்தோலிக்கருமான வன்டே ஸ்ரோன் ஆகியோரின் கையொப்பத்துடன் அக்குறிப்பு இலத்தீன் மொழியில் எழுதப்பட்டிருந்தது.

அக்குறிப்பில், இவ்விடத்தில் அமலமரித்தியாகி அருள்தந்தை லிஜியேயின் உடல் வைக்கப்படுகிறது. 30 ஆவது வயதில் அவர் ஆண்டவருக்குள் துயில்கொள்கிறார். ஆண்டுகளைவிட புண்ணியங்களால் மிகுந்து வதிரி என்ற இடத்தில் 1851ம் ஆண்டு யூன் 16ம் திகதி அடக்கம் செய்யப்படுவதாகவும், கடந்த இரண்டு ஆண்டுகளாக இத்தீவில் கடவுளின் மகிமைக்காகவும் ஆன்மாக்களின் மீட்புக்காகவும் மிகக் கடினமாக உழைத்தார் எனவும், சிறப்பாக, கொலரா நோயினால் பாதிப்புற்றவர்களுக்கு உதவுவதிலும், அவர்களை நோயிலிருந்து காப்பாற்றப்படுவதிலும் ஒரு நல்லாயனாகத் தம் மந்தைகளுக்காகத் தமது வாழ்வையே கையளித்தார் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

**புனித துறவி அருள்தந்தை லிஜியே அடிகளார்!**

அருட்தந்தை லிஜியேயின் இறப்பின் பின்னர், 1850ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி அருட்தந்தை அவர்களின் இரத்தத்தால் கையொப்பமிடப்பட்ட குறிப்பு கண்டெடுக்கப்படுகிறது. அதிலே ''ஓர் அருட்பணியாளர் (குரு)

ஒரு வாய்க்கால் மட்டுமல்ல, அவர் மிகுதியாக நீர் வழங்கும் நீர்த்தேக்கம். செபம், தியாகம் ஆகியவற்றால் மட்டுமே வளம் கொழிக்கும். என்னுடைய ஒழுங்கு நூலின்படி நான் செபத்திலும் தியாகத்திலும் வாழ்வதாக வாக்குறுதி எடுத்திருக்கிறேன். அதனை மிக பிரமாணிக்கமாக கடைப்பிடிப்பேன், மிக சாதாரண உணவை உண்பேன், ஒழுக்கத்தை உறுதியாகக் கடைப்பிடிப்பேன், தரையில் படுத்துறங்குவேன், உணவை மிகக் குறைவாக சாப்பிடுவேன்!" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் அவர் மிகப் பலவீனமாக இருந்தபோதும் மிகக் கடுமையான உபவாசத்தை கடைப்பிடித்து இருந்திருக்கிறார். துரதிஸ்டவசமாக, உடலை மிக மோசமாக வருத்திச் செய்யும் அருட்தந்தை லிஜியேயின் தவத்தினை, அருட்தந்தை சமேரியா பின்னரே அறிந்து கொள்கிறார். அருட்தந்தை சமேரியா தன்னுடைய மறைப்பரப்பாளர்களை இவ்வாறான தியாகங்களை மிதமான முறையில் செய்யும்படி கேட்டுக் கொள்கிறார். ஆனால், அவருடைய எதிர்ப்பார்ப்பு வெற்றிபெறவில்லை. ஏனெனில் அமலமரித்தியாகிகள் குடும்பத்திற்கு பொறுப்பாக இருந்த சமேரியா அடிகளாரே, தன்மட்டில், பல ஒறுத்தல்களையும் தியாகங்களையும் செய்து வந்தார்.

லிஜியே அடிகளாரே, இலங்கையில் ஆட்கொல்லி நோய்க்குப் பலியான முதலாவது அமலமரித்தியாகி ஆவார். இவ்வாண்டு லிஜியே அடிகளாரின் மண்ணகப் பிறப்பின் 205ம் ஆண்டு நிறைவாகும்.

**உசாத்துணை**

Philips Jesuthasan, Our tribute, Vol. 1, Oblate Study Club, Ampitiya, 2001.